Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au

# ஆண்டு 9

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் அன்பான வணக்கம் .......

## உயர்வு தரும் தமிழர் பண்பாடு

நடுவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், சக மாணவர்களுக்கும் எனது வணக்கத்தினைக் கூறிக்கொள்கின்றேன். இன்று நான் ‘ உயர்வு தரும் தமிழர் பண்பாடு’ எனும் தலைப்பில் பேச வந்துள்ளேன்.

நாம் அனைவரும் ஓர் உயர்வான வாழ்வினை வாழ ஆசைப்படுகின்றோம். அந்த உயர்வான வாழ்வினை எப்படி பெறுவது?
அதற்கு முதலில் எமது உள்ளத்தினைப் பண்படுத்த வேண்டும்.
எவ்வாறு பண்படுத்துவது? நற்பண்புகளை வளர்க்கும் செயல்கள் மூலம் பண்படுத்தலாம்.

எமது பெற்றோர்கள் கூறுகின்ற நல்ல நல்ல அறிவுரைகளை எப்போதும் கேட்டு நடத்தல் வேண்டும். அந்த அறிவுரைகள் எம்மை உயர்வான நிலைக்கு எடுத்துச் செல்லும். இதனையே ஔவையார் ‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்’ என்கிறார்.

அடுத்து ஆசிரியர்களை நாம் மதித்து நடத்தல் வேண்டும். இதையே ‘எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்’ என்று எம் பண்பாடு கூறுகிறது. தமிழர் பண்பாடு என்பது எம் வாழ்வினை அழகாக வடிவமைத்துச் செல்லக்கூடியது.

ஔவை, கம்பன், வள்ளுவன், பாரதி போன்ற தமிழ்ப் புலவர்கள் தமது பாடல்களின் மூலம் தமிழரின் பண்பாட்டினை அழகாக எடுத்துக் கூறியுள்ளனர். அவர்களின் படைப்புகளைப் படிப்பதன் மூலம் நமது உள்ளம் பண்படும். எமது உள்ளம் பண்பட்டால் நாம் வாழ்வில் முன்னேறிச் செல்லலாம். மற்றவர்கள் எம்மை மதித்து புகழும் நிலைக்கு உயர்வோம்.!

நன்றி
வணக்கம்.

திருமதி. துளசி ராம்குமார் ஐயர்



பேச்சுப் போட்டி எதிர்வரும் 06.06.2026 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.